11-25 மணி

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று மொழியப்பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். முதலில் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன் :

"1. கிராமப் புற ஏழை மக்கள் அனைவருக்கும் வீட்டு மனை கிடைக்கும் வகையில் அறிவிப்பு பற்றியும்;

2. பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் பற்றியும்;

3. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து ஏழை விவசாயிகள் பயன்பெற அறிவிப்பு பற்றியும்;